செ.வெ.எண்: 736/2016 நாள்: 19.10.2016

ஊ5/3598/2015

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்.

# <u>பத்திரிக்கைசெய்தி</u>

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவுப்படி 19.10.2016 தேதியன்று மாவட்ட உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ,கூட்டுறவு சங்க பணியாளர்கள் மற்றும் நுகர்பொருள் வாணிபகழக பணியாளர்கள் அடங்கிய குழுக்கள் மூலம் ஒரே நேரத்தில் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் ARS நேசமணி நகர்-2, PCB ராமன்புதூர் நியாயவிலைக் கடைகளிலும் ,தோவாளை வட்டத்தில் ARS வெள்ளமடம்-I, PACB கேசவன்புதூர் நியாயவிலைக் கடைகளிலும், கல்குளம் வட்டத்தில் கூட்டுறவு பண்டகச்சாலையின்கீழ் செயல்பட்டு வரும் கீழகல்குறிச்சி நியாயவிலைக்கடை மற்றும் PACB கல்லங்குழி நியாயவிலைக் கடையிலும் விளவங்கோடு வட்டத்தில் ARS பாலவிளை மற்றும் PACB வைக்கல்லூர் ஆகிய நியாயவிலைக் கடைகளிலும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலுள்ள வீடுகளிலும் போலி குடும்ப அட்டைகள் குறித்தும் நியாயவிலைக் கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் 100% திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. தணிக்கையின்

போதுபோலிஎனகண்டறியப்பட்ட67குடும்பஅட்டைகளுக்குஉணவுபொருள் நிறுத்தம் செய்யப்பட்டது. மேலும் இருப்புக்குறைவு, எடைகுறைவு மற்றும் போலிப்பட்டியல் போன்ற இனங்களில் முறைகேடு செய்யப்பட்ட நியாயவிலைக் கடைபணியாளர்களின் மீதுரூ.64,813/- அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஒம்/-சஜ்ஜன்சிங் ரா சவான்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரிமாவட்டம்,
(இ) நாகர்கோவில்.

/உண்மைநகல் ஆணைப்படி/
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.